# 16 சான்றினூடாக தைரியப் பணி

**பவுல் உரோமைக்கு கைதியாக சென்ற பயணத்தை கற்பதன் மூலம் கிறிஸ்தவர்கள் சான்று பகர்வதற்கான முறைகளை வெளிப்படுத்தி எப்போதும் கிறிஸ்துவுக்காக பொறுமையும் உண்மைத்துவத்தோடு ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை முன் வைப்பது இப் பாடத்தின் நோக்கமாகும்.**

**தி.ப: 25:10-11 26:32 27, 28 ம் அதிகாரங்கள்**

மூன்றாம் மறைத்தூதுப் பயணத்தின் இறுதியில் அகபு என்னும் இறைவாக்கினர் கூறியபடி எருசலேம் ஆலயத்தில் பவுல் கைது செய்யப்பட்டார். யூதர்களின் தலைமைச் சங்கத்தில் ஆளுநர் பெலிக்சுவின் முன்னால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். பவுல் கிறிஸ்துவின் பெயருக்காக எவ்வளவு துன்புற வேண்டும் என்பதை, அவரில் மாற்றம் நிகழ்ந்த சந்தர்ப்பத்திலே கண்ட தரிசனத்தின் மூலமாக, எருசலேமிலும் அவர் சான்று பகர்வார் என உணர்த்தப்பட்டது.

## உரோமை பயணத்தின் மூலம் சான்று பகர்தல்
## தி.ப : 25:10-11, 26:32, 27:1

பவுலுக்கு எருசலேமில் மரணதண்டனையை அளிப்பதே தலைமைக் குருக் களினதும் யூதர்களினதும் நோக்கமாக இருந்தது. தனக்கு எதிராக முன்வைத்த குற்றச்சாட்டுக்களில் தாம் நிரபராதி என்பதை பவுல் அறிந்திருந்தார். உரோமைக் குடியுரிமையை தனக்கு கிடைத்த கொடையாகப் பயன்படுத்தி உரோமையரின் ஆளுநரே தனக்கு நீதி வழங்க வேண்டுமென கேட்டுக்கொண்டார். எவ்வாறு இருப்பினும் உரோமைக்குச் செல்வதே இவரின் அபிப்பிராயமாக இருந்தது. இதனை நிறைவேற்றிக் கொள்வதற்காக, பெஸ்து, அகிரிப்பா அரசர்களின் மூலமாக பவுல் உரோமை செல்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

பவுல் கைதியாக உரோமையை நோக்கி சென்றார்
அவரோடு பயணத்தில் லூக்காவும் அரிஸ்தர்குவும் இருந்தனர்

இலவச விநியோகத்திற்காக

## பயணத்தின் ஆரம்பத்திலே சான்று பகர்தல் (தி.தூ.ப :27:1-3)

சிறைக்கைதியாக பவுல் இத்தாலியை நோக்கிச் சென்ற கப்பலில் கொண்டு செல்லப் பட்டார். அதில் இன்னும் அநேக கைதிகளும் கொண்டு செல்லப்பட்டனர்.

அகஸ்து படைப்பிரிவைச் சேர்ந்த, யூலியு என்னும் நூற்றுவர் தலைவரிடம் இக் கைதிகளின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.




திசைகாட்டி இல்லாத பழமையான காலத்தில், கடல் பயணத்தின்போது நட்சத் திரங்களே வழி காட்டியாகக் காணப்பட்டது. ஆபத்தான காலநிலை ஏற்படும்போது, கப்பலில் பயணம் செய்வது மிகவும் பயங்கரமானது ஆகும். அவ்வாறே, செப்டம்பர் மாதம் கடல் போக்குவரத்து சந்தேகத்திற்குரியதாகும். நவம்பர் மாதம் அளவில் இதுமிகவும் ஆபத்தானதாகவும் பயணிக்க வசதியற்றதாகவும் காணப்படும். பவுலும் அவரது குழுவினரும் உரோமையை நோக்கிச் சென்ற இச்சம்பவம் ஒக்டோபர் மாதம் நிகழ்ந்ததாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவை அனைத்திலும் அனுபவம் கொண்ட பவுலின் உண்மைக்கருத்துக்களும் ஆலோசனைகளும் ஏற்றுக் கொள்ளப்படாமையால், அவர்கள் முன்னோக்கிய பயணத்தில் பல ஆபத்துக்கள் நிகழ்ந்ததைக் காண்கிறோம்.

**புயலிலும் கப்பல் சேதத்திலும் சான்று பகர்தல் (தி.தூ.ப:27:13-44)**

கிரேத்து தீவுக்கு வந்ததும் பயங்கரமான ஆபத்துக்களுக்கு முகம் கொடுத்தனர் அவர்கள் முகம் கொடுத்த ஆபத்து என்ன என்று உங்களுக்குத் தெரியுமா?

யூரக்கிலோன் என்னும் புயல்

இது கப்பல் ஓட்டுநருக்கு மிகவும் பழக்கமான ஆபத்தைக் கொண்டுவரும் வாடைக்கொண்டல் என்னும் புயலாகும். இது கீழைத்தேசத்தில் உருவாகின்றது

வாடைக்கொண்டல் புயலின் காரணமாக

உயிரைப் பாதுகாப்பதற்காக பிரச்சனை உருவாகியது. → பயம், சந்தேகம்

தமக்கு உரிமையான பொருள்கள் அழிந்து போயின → தைரியத்தை இழத்தல்.

இருளான சூழ்நிலையில் உயிரைப் பாதுகாக்க வேண்டி ஏற்பட்டது. → மனக்குழப்பத்தினால், தன்னம்பிக்கை சிதைந்துபோதல்

வாழ்வின் ஆபத்துக்களில் ஏற்படும் புயலின் காரணமாக

இவை அனைத்தினதும் மத்தியிலும் பவுல் விசுவாசத்தோடு தைரியமாக சான்று பகர்ந்தார். தி.ப : 27:21-26.

**“என் மேல் உரிமையுடையவரும் நான் வழிபடுபவருமான கடவுளின் தூதர் நேற்றிரவு என்னிடம் வந்து பவுல் அஞ்சாதீர்; நீர் சீசர் முன்பாக விசாரிக்கப்பட வேண்டும்; உம்மோடும் கூடக் கப்பலிலுள்ள அனைவரையும் கடவுள் உம்பொருட்டு காப்பாற்றப் போகிறார்”என்றார் (தி.ப:27:23-24)**

பவுலின் இச்சாட்சியின் ஊடாக, நூற்றுவர் தலைவரும் கப்பலோட்டுனரும் பவுலுக்கு விசுவாசத்தோடு செவிகொடுத்தனர். பின்னடையாது, தேவையான வழி முறைகளை எடுத்தனர். பவுல் அனைவரையும் தைரியப்படுத்தி, உணவு உட் கொள்ளச்செய்து, பெலனடையச் செய்தார்.

**சான்று பகர்வதால் வாழ்க்கைப் புயலையும் சவால்களையும் வெற்றி கொள்ள பெலனும் தைரியமும் கிடைக்கும்.**

சிறைக்கைதியாக இருந்து சவால்களின் மத்தியில் சான்று பகர்ந்து பிறரைத் தைரியப் படுத்திய பவுலின் உயிரைக் காப்பாற்றுவதற்கு நூற்றுவர் தலைவர் முன்வந்தார். (தி.ப:27:42-44)

***மால்தா தீவில் சான்று பகர்தல்*** (தி.தூ.ப:28:1-10)

மால்தா தீவு என்பது சிசிலியாவின் 60 மைல் வடக்கில் அமைந்து இருந்த நகரம். இங்கு வியாபாரத்திற்கான முக்கியமான துறைமுகங்கள் பல காணப்பட்டன.

**மால்தா மக்கள் செய்த உதவிகள்**

- குளிரானபடியால் தீ மூட்டி பவுல் மற்றும் அனைவரையும் அழைத்தனர்
- மூன்று நாட்கள் வரவேற்று அன்புடன் அவர்களுக்கு விருந்தோம்பினர்
- அவர்கள் புறப்பட்ட போது அவர்களுக்கு தேவையான அனைத்தையும் கப்பலில் ஏற்றினர்

மால்தா தீவில் குளிர்காய்ந்து கொண்டிருந்தபோது விறகில் இருந்து வெளிப்பட்ட பாம்பு பவுலின் கையைப் பாம்பு பற்றிக்கொண்டபோது அதனை உதறிவிட்டு தீங்கு ஏதும் ஏற்படாதிருந்த சம்பவத்தின் ஊடாக பவுல் சான்று பகர்ந்தார் என்பதை நாம் அறிய முடியும். (தி.ப : 28:3-6)

முதலில் அவர் ஒரு கொலைகாரன் என மக்கள் மத்தியில் நிலவி வந்த கருத்து, இதன் மூலம் அவர் ஒரு தெய்வம் என்று சொல்லக்கூடியதாக மாறியது. லீஸ்திராவின் நிகழ்வின் பின் தெய்வமாக கருதப்பட்ட இரண்டாவது சம்பவம் இதுவாகும்.

அத்தீவின் தலைவரான புப்பிலியுவின் தந்தையையும் மேலும் அநேக நோயாளர் களையும் குணப்படுத்தி பவுல் கடவுளுக்குச் சான்று பகர்ந்தார். (தி.ப : 28:7-10)

ஜெபத்திலும் விசுவாசத்திலும் நிலைத்திருந்து அற்புதங்கள் செய்து, சான்று பகர்வதற்கு முன்வந்த பவுலின் சிறப்பான பணியை பவுலின் இந்த பயணத்தின் மூலம் நாம் காண்கின்றோம்.

## உரோமையில் சான்று பகர்தல் (தி.ப :28:11-30)

உரோமை அரசின் விசாரணையை எதிர்பார்த்து, கடவுளின் ஞானத்தோடும் வழிநடத்துதலோடும் ஆபத்தான கடல் பயணத்தை நிறைவு செய்து உரோமைக்குச் சென்ற பவுல், கிறிஸ்துவுக்காக சான்று பகர்வதையே அவரின் ஒரே நோக்கமாகக் கொண்டு செயற்பட்ட முறைகள் எமக்குத் தெளிவாகின்றன.

கிறிஸ்தவர்களின் வாழ்க்கைப்பயணத்தில், தடைகள், குழப்பங்கள், பிரச்சனைகள் போன்றவற்றிற்கு முகம் கொடுக்க நேரிடும்போது, அவை அனைத்தின் மத்தியிலும் விசுவாசமுள்ளோராய் வெற்றிகொள்வதற்கு தூய ஆவியின் வழிகாட்டலும் தைரியமும் அவசியமாகும். இவையனைத்தையும் பவுல் நிறைவாய் பெற்றுக்கொண்டார் என்பதை அவரின் உரோமைப்பயணத்தின் மூலமாக விளங்கிக்கொள்ள முடியும். இதன் மூலம் ஆபத்துக்கள் சவால்களின் மத்தியில் கிறிஸ்தவர்கள் துணிவோடு உண்மைக்குச் சான்று பகரவேண்டியதின் அவசியத்தை உணர்ந்துகொள்வது முக்கியமாகும்.

இறுதியாக; பல துன்பங்களின் மத்தியில், சிறைக்கைதியாக, நேர்மையற்ற தீர்ப்புக்கு முகம் கொடுக்க நேர்ந்தாலும்; நற்செய்தியைப் பறைசாற்றுவதிலும், திருமடல்கள் எழுதுவதிலும், விசேடமாகச் செயற்பட்டு உரோமை செல்லும் பயணத்தின் இறுதியில், கி.பி 64 இல், நீரோ என்னும் ஆளுநரின் காலத்தில், மறைசாட்சியாக மரித்து கிறிஸ்துவின் விசுவாசத்தின் பணியாளராக பவுல் சான்று பகர்ந்தார். இவ்வறு பவுல் முழு உலக கிறிஸ்தவ சபைகளுக்கும் முன்மாதிரியான ஒளியாகத் திகழ்ந்தார்.

**செயற்பாடு**

01. உரோமைக்குச் சென்ற பயணத்தில் பவுல் கடவுளுக்கு சான்று பகர்ந்த சந்தர்ப்பங்களுக்கான உதாரணங்கள் சிலவற்றை எழுதுக?

02. சான்று பகர்வதன் ஊடாக தூய ஆவியானவரின் வல்லமையையும் பெலனையும் அனுபவிக்கக்கூடிய முறைகளை எழுதுக?